உ

சிவமயம்




அமரர்

# உயர்திரு.மு.சுப்பையா அவர்களின்

நினைவாக வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

18.01.2001

அமரர்

## உயர் திரு- முருகேசு-சுப்பையா அவர்கள்

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

தோற்றம்

24 - 07 - 1024



மறைவு

19 - 12 - 2000

### திதி வெண்பா

ஊருக்கே உயர்வு தரும் உத்தமமாம் குணம் படைத்து
பாருக்கே பெருமை தரும் பண்புடைய சேவைசெய்து
பேருக்குள் மறைந்திருந்த பெருந்தகையோன் சுப்பையா
தேருக்குள் ஏறிக் கண்ணன் அடிசேர்ந்தார் திதி நவமிதுதி

சங்கானை

தொட்டிலடியைப் பிறப்பிடமாகவும்

மூளாயை

வாழ்விடமாகவும் கொண்டிருந்து

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த

அமரர்

உயர்திரு. மு. சுப்பையா அவர்களின்

நினைவாக வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

**18-01.2001**

# சமர்ப்பணம்

சங்கைநகர்ப் பிறந்து சரித்திரங்கள் பல படைத்து
மங்கையினைத் தேடி மூளாய் மண்ணிடத்தே மலர்ந்திருந்து
பொங்கு தமிழ்ப் புதல்வரோடு புத்திரியாரு மீன்று
மங்களமாய் மாதவனின் வீதியிலே மலர்ந்திருந்த
எங்களுயிர்த் தந்தையார் ஏற்றமிகு சுப்பையர்
சங்கமமாய்ப் போனார் சன்னிதியான் அடியிலென்று
செங்கமலப் பூவெடுத்து சீருடனே மலர்வடித்து
பங்கமிலாப் பதத்தே படைப்போம் சமர்ப்பணம்



# அமரர் அவர்களின் வாழ்க்கையின் பாதையிலே

சங்கைநகர் தொட்டிலடி
தந்ததொரு பேருடையோன்
முருகேசு சின்னாச்சி
தம்பதியர் பெற்றெடுத்தோன்
அன்னப்பிள்ளை அம்மையிற்கு
பண்புடைய தங்கையிருவர்
நாகம்மா தங்கம்மா
நாடிநின்ற அண்ணனார்
சுந்தரத் தமிழ்மகனார்
எங்கள் சுப்பையர் ஆனார்!

கண்ணியமாய் சேவை செய்யும்
காவல் துறைதனிலே
திண்ணியமாய் சேவை செய்து
தீரமுடன் திகழ்ந்து
நாடு முற்றும் ஓடி ஓடி
நற்றமிழால் நயம் செய்து

பொற்குடமாய்ப் பொலிசாரின்
புகழ் மலையின் உச்சியிலே
தங்கமகன் எவரென்று
தரணியெல்லாம் மகிழ நின்றார்!

முத்தமிழுர் மூளாயின்
மூத்த தலைமகனார்
விசுவலிங்கம் தம்பதியர்
பெற்றெடுத்த பெண்ணழகாள்
தங்கம்மா அம்மையாரை
தன்னவளாய் கரம்பிடித்து
தரணியில் இல்வாழ்வை
இனிதுறவே நடத்திநின்று
வாழ்வென்றால் இதுவென்று
வாழ்வோற்கு காட்டி நின்றார்!

பாலகராய் பஞ்சவரை
பண்புடனே பெற்றெடுத்து
தன்போல் அசர்களையும்
தரணியிலே வளர்த்தெடுத்து
கல்வியொடு கலைகளிலும்
வல்லவராய் வகுத்து வைத்து



பாஸ்கரன், பிரபாகரன்
பைந்தமிழாள் கலைவாணி
வசீகரன், கிருபாகரனென
பேர்சுமந்தார் பெருந்தகையே!

பாசமுறு பாஸ்கரனார்
வளர்மதியைக் கரம் பிடித்து
சிந்துஜா என்றழைக்க
செல்லமகள் பெற்றெடுத்து
கனேடிய நாட்டையே
கண்ணியமாய் வாழ்வுற்று
பெற்றெடுத்த பெற்றோர்க்கும்
பிறந்த பொன் நாட்டிற்கும்
நற் பெயரை சேர்த்து வைத்தார்
நாமெல்லாம் மகிழ்ந்திடவே!

பிரபாகரன் பிள்ளை
பிரியமுடன் ஜேர்மனியில்
பெரும் செவை செய்து
சுகம் சேர்த்து வாழ்வினிலே
கண்ணியமாய் வாழ்ந்திருக்க
கண்டு மகிழ்வுற்று

வேண்டுவது எனக்கு இனி
ஏதுமில்லை என்று
கண்ணைடிக் கடமையையே
சிரமேற் கொண்டிருந்தார்!

கண்ணியமாய் கலைவாணி
எண்ணிய வாறினிலே
நீதிமன்றக் கடமையாற்றும்
கிருஸ்ணபாலன் மைத்துனரை
மனம் நிறைந்த கணவராய்
மகிழ்வோடு ஏற்று
இராகுலன், கீர்த்திகா
மக்களையும் பெற்றெடுத்து
ஊருக்கும் உறவுக்கும்
உயர்ந்தோராய் வாழ்கின்றார்!

வாஞ்சையொடு வசீகரன்
வாழ்வினிக்க வையகத்தே
தேர்ந்து ஒரு சிவரஞ்சினியை
திருக்கரம் பற்றி நின்று
மாண்புடனே வாழ்கின்ற
மகிழ்ச்சியுறு செய்தியோடு



தீந்தமிழார் சுப்பையா
தினம் அவர் அன்பினிலே
திளைத்திருந்தார் மக்களிவர்
கிளைவிட்டுத் தளைக்கையிலே!

கிரபையானவர்க்கு
கிருபாகரன் பிறந்ததனால்
கடமை செய்யக் காத்திருந்தான்
கண்முன்னே நாளெல்லாம்
வலி தென்மேற்கு பிரதேச
சபைதனிலே பதவியெற்று
பண்பினால் பணிவுடனும்
துணிவுடனும் கடமை செய்து
நன்மதிப்பினோடு இன்று
நம்மிடையே வாழ்கின்றார்!

இனியவர் சுப்பையா
இன்புற்று இரக்கையிலே
கனிவோடு பேசுவார்
கண்ணியமாய் அணுகுவார்
வயிரவர் கோயிலை
வகையாக உருவாக்கி
பேணியவர் பெருமையை

ஊரவாக்கு ஊட்டியே
மனம் நிறைந்த மகிழ்வோடு
மலர்ந்திருந்தார் ஊரினிலே!

அணிந்திருந்த உடலையவர்
அறிந்திருந்த தில்லை
பதுங்கியோா பிணிவந்து
விழுங்கியது உயிரை
வெதும்பினர் மனைமக்கள்
வெந்தெழுந்தார் மருமக்கள்
பிரிவுத் துயர் தாங்கா
பேதலித்தார் பேரர்கள்
ஊரோடு உறவும் உருக்குலைந்து நிற்க
கண்ணீரின் மத்தியிலே அவர் கண்ணனடி சேர்ந்தார்.

ஓம் சாந்தி



## மனம் நிறைந்த மனைவியாரின் உள்ளக்குமுறல்

ஊனத்து உறவென்று உன்னை நான் எண்ண வில்லை
உயிருக்குள் உறவென்று உத்தமனே எண்ணி நின்றேன்
வானத்து நிலவென்று வளி தனிலே பார்க்க வில்லை
வையத்துள் சூரியனாய் வைத்திருந்தேன் மன்னவனே
கானத்த நீரென்று கருதவில்லை கண்ணவனே
பானைக்குள் தேனாகப் பக்குவமாய் வைத்திருந்தேன்
மானத்து வாழ்வுக்கு மடிநிறைந்த சொத்தென்றோ
காலன் ஓலைக்கு மதிப்பிட்டு கடிதெனவே சென்றிட்டீர்.

## அன்னாரின் பிள்ளைகளின் பெரும்துயர்!

மக்களாய் எமையீன்று மகிழ்வெல்லாம் தந்தீர்
சுப்பையா மக்களென்றோர் சுகம் காண்போம் வாழ்வில்
தப்பேதும் செய்தாலும் தட்டியெமைக் கேட்காமல்
அன்பிற்கே அடிமையாய் ஆக்கி யெமை வளர்த்தீர்கள்
அப்பா உம்முகம் காண ஆவலுடன் நாமிருந்தோம்
தப்பான கணக்கென்றோ காலன் கணக்கிட்டான்
எப்போது வருவீர்கள் எம்மிடத்தே எந்தையே
அப்போதே கண்ணீர்த் துளி மறைக்கக் காத்திருப்போம்

## மருமக்களின் மனச் சோகம்

மாமா என்றழைத்தது மோர் மலர்ந்த முகம் கண்டோம்
மனத்திலுள்ளே ஊறிடுமோர் பாச உணர்வு கண்டோம்
பேதங்கள் இல்லாத பிள்ளை மனம் கண்டோம்
பிரிந்திடவே முடியாத இதயம் கண்டோம்
கண்டதெல்லாம் கண்டோம் சுப்பையா என்றோர்
மனிதத்தெய்வத்தை மனத்திரையில் கண்டோம்
என்று இனி மாமா உங்கள் முகத்தைக் காண்போம்
ஏழையெமைக் காத்திட நீர் எழுந்துவாரீர்!

## பாசத்தால் பரிதவிக்கும் பேரப்பிள்ளைகள்

தங்கமனத் தாத்தாவே நிலவுமெங்கே
நில்லாமல் ஓடியதாய் நீயுமெங்கே
பலாவோடு வாழையெல்லாம் வாங்கித்தந்தாய்
பலகாரம் சுட்டவுடன் கொண்டு வந்தாய்
கதை கதையாய் சொல்லியெமை களிக்க வைத்தாய்
கலங்காத விளியோடு சுமந்து செல்வாய்
கோயிலுக்குப் போனாலும் வந்திருப்பாய் இன்று
வராமல் போய் விட்டாய் எங்கே போனாய்!



## அமரர் அவர்களை நினைவு கூரும் உற்றார் உறவினர்கள்

எல்லையின் காவலன் எமக்கென்றும் நீயன்றோ
தொல்லைகள் இல்லாத தூயமகன் நீயன்றோ
அல்லும் பகலும் அந்த ஆலயத்து வாசலிலே
நல்ல மனத்தோடு நின்ற தெய்வம் நீயன்றோ
சொல்லும் செயலும் என்றாய் செய்வதெல்லாம் நீயன்றோ
வெல்லும் வழியெமக்கு சொல்வதுவும் நீயன்றோ
கொல்லும் நோயதுவோ வந்துனது வாழ்வழித்து
கல்லுருகக் கவர்ந்தது கலங்குகிறோம் கண்பாராய்!

## தேற்றம்

சுப்பையா என்றொரு மனிதருள் மாணிக்கம்
மறைந்தது என்றோ மயங்குகிறீர் மக்காள்
மண்மீது நடந்தவற்றை மறக்கவே முடியாமல்
கண்ணீரைச் சொரிந்தோ கலங்குகிறீர் நீங்கள்
விழிநீரைத் துடைத்து விட்டு விண்ணவரைப் பாரும்
தன்னவராய் எங்கள் தலைவரைத் துளைத்து
பன்னீரைச் சொரிந்து பல்லக்கில் ஏற்றி
நல்லூரில் சேர்த்திட்டார் நலம்பெறவே வாரும்.

உ

சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் துதி

பாலும் தெளி தேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா

## தேவாரம்

பித்தாபிறைசூடி பெருமானே யருளாளா
வெத்தான்மற வாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணை தென்பால் வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
ளத்தாவுனக் காளாயினி யல்லேனெனலாமே.



## திருவாசகம்

அம்மையேயப்பா வொப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவாரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையேன்றனக்குச்
செம்மையேயாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மை யேயுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணி விளக்கைச்
செற்றவா புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளங்
குளிர வென்கண்கள் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப்பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கரமென்றருள் செய்தவன்
மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமேயிட மாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகெலாமுணர்ந்த தோதற்கரியவன்
நிலவுலாவியநீர்மலி வேணியவன்
அலகில்சோதியனம்பலத் தாடுவன்
மலர்சிலம்பு வாழ்த்திவணங்குவாம்.



## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞான மொழி பேசுமுக மொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம் புணர வந்த முக மொன்றே
ஆறு முக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேளவி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலகமெல்லாம்

# திரு மொழி

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே
ஆயர்ந்து கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான் போய்
இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரும் நானே,

## வைரவர் வணக்கம்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலைக் கிள்ளியே யொளிந்தவானவன்
குருதியுமகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதருவகெனைப் போற்றி செய்குவாம்

வெஞ்சினப் பரியழன் மீது போர்திடு
மஞ்சனப் புகையென வாலமாமெனச்
செஞ்சுடர்ப் புவமேற் செறித்தமாமணிக்
கஞ்சுகக் கடவுள் பொற்கழல்களேத்துவாம்



# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியுமந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியையாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதேவளருதியோவன் செவியோ நின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க்கேட்டலுமேவிம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதாரமழியின் மேனின்றும் புரண்டிங்ங
னேதேனுமாகாள் கிடந்தாளென் னேயென்னே
யீதேயெந்தோழி பரிசேலோரெம்பாவாய்.

பாசம்பரஞ் சோதிக்கென் பாயிராப்பகனாம்
பேசும்போதெப்போதிப் போதாரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீயிவையுஞ் சிலவோவிளையாடி
யேசுமிடமீதோவின் ணோர்களேத்துதற்குக்
கூசுமலாப்பாதந்தந் தருளவந்தருளுந்
தேசன்சிவலோ கன்றில்லைச் சிற்றம்பலத்து
ளீசனாக்கன் யாராயாமா ரேலோரெம்பாவாய்

முத்தன்னவெண்ணகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
னத்தனானந்தன முதனென்றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய்வந்துன் கடைதிறவாய்
பத்துழடையீரிசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்தாட்டிகாண்டநற்பொல்லாதோ
வெத்தோநின்னன் புடைமை யெல்லோமறியோமோ
சித்தமழகியார்பாடா ரோநஞ்விவனை
யித்தனையும் வேண்டுமெமக்கே லோரெம்பாவாய்

ஒண்ணித்தில நகையாயின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக்கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொண்டுள்ளவா சொல்லுகோமவ்வளவுங்
கண்ணைத்துயின்றவமே காலத்தைப்போக்காதே
விண்ணுக்கொருமருந்தை வேதவிழுப் பொருளைக்
கண்ணுக்கினியானைப் பாடிக்கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுருகாயா மாட்டோநீயேவந்
தெண்ணிக்குறையிற்று யிலேலோரெம்பாவாய்



மாலறியாநான் முகனுங்கா ணாமலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்களேபேசும்
பாலூறுதேன்வாய் படிறீகடைதிறவாய்
ஞாரமேவிண்ணே பிறவேயறிவரியான்
கோலமநம்மையாட் கொண்டரளிக்கோதாட்டுஞ்
சீலமம்பாடிச் சிவனேசிவனேயென்
றொலமிடினுமுணரா யுணராய்கா
னலக்குழலிபரிசேலோ ரெம்பாவாய்

மானேநீநென்னலை நாளை வந்துங்களை
நானேயெழுப்புவனென்றலு நாணமே
போனதிசைபகராயின்னம் புலர்ந்தின்றோ
வானேநிலனே பிறவேயறிவரியான்
றானேவந்தெம்மைத்தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார்கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவா
யூனேருகாயுனக் கேயுறு மெமக்கு
மேனோர்க்குந்தங் கோனைப் பாடேலோரெம்பாவாயய்.

அன்னேயிவையுஞ் சிலவோபலவமர
ருன்னற்கரியானொரு வனிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென்னாமுன்னந்தீசேர் மெழுகொப்பாய்
என்னானையென்னரையனின்ன முதென்றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாயின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப்பேதையர் போல்வாளாகிடத்தியால்
என்னேதுயிலின் பரிசேலோரெம்பாவாய்

கோழிசிலம்பச்சிலம்புங் குருகெங்கு
மேழிலியம்பவியம் பும்வெண் சங்கெங்கும்
கேழில்பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீதென்னவுறக்கமோ வாய்திறவா
யாழியாள்ன்புடமை யாமாறுமிவ்வாறோ
வூழிமுதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங்காளனை யேபாடேலோரெம்பாவாய்



முன்னைப்பழம்பொருட்கு மன்னைப்பழம்பொருளே
பின்னைப்புதுமைக்கும் பேர்த்துமப்பெற்றியனே
யுன்னைப்பிரானாகப் பெற்றவுன் சீரடியோ
முன்னடியார்தாள் பணிவோமாங்கவர்க்கேபாங்காவோ
மன்னவரே யெங்கணவரா வாரவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப்பணி செய்வோ
மின்னவகையேயெமக் கெங்கோனல்குகுதியே
லென்னகுறையுமிலோ மேலோரெம்பாவாய்

பாதாளமேழிங் கீழ்சொற்கழிவுபாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொரண்முடிவே
போதையொருபாற்றிரு மேனியொன்றல்லன்
வேதமுதல்விண் ணோருமண்ணுந் துதித்தாலு
மோதவுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில்குலத்தான்றன் கோயிற்பிணாப்பிள்ளைகா
ளேதவனூரேதவன் பேராருற்றாராயலா
ரேதவனைப்பாடும் பரிசேலோரெம்பாவாய்

மொய்யாதடம் பொய்கைபுக்குமகேரென்னக்
கையாற் குடைந்துன் கழல்பாடி
யையாவழியடியோம் வாழ்ந்தோங்காணாரழல்போற்
செய்யா வெண்ணீறாடி செல்வாசிறுமருங்குன்
மையார்தடங்கண் மடந்தைமணவாளா
வையாநீயாட் கொண்டருளும் விளையாட்டி
னுய்வார்களுய்யும்வகை யெல்லா முய்ந்தொழிந்தோ
மெய்யாமற்காப்பாயெமை யேலோ ரெம்பாவாய்

ஆர்த்தபிறவித்துயர் கெடநாமார்த்தாடுந்
தீர்த்தநற்றில்லைச் சிற்றம்பலத்தேதீயாடுங்
கூத்தனிவ்வானுங் குவலயமுமெல்லோமுங்
காத்தும்படைத்தங்கரந் தும்விளையாடி
வார்த்தையும் பேசிவளைசிலம்பவார்கலைக
ளார்ப்பரவஞ்செய்யவணிகுழன் மேல்வண்டார்ப்பப்
பூதுத்திகழும்பொய்கை குடைந்துடையான் பொற்பாத
மேத்தியிருஞ்சுனை நீராடேலோரெம்பாவாய்



பைங்குவளைக்கார் மலராற்செங்கமலப்பைம்போதா
லங்கங்குருகினத்தாற் பின்னுமரவத்தாற்
றங்கண்மலங்கழுவுவா வந்துசார்லினா
லெங்கள்பிராட்டியு மெங்கோனும்போன்றிசைந்த
பொங்குமடுவிற்புகப் பாய்ந்துநஞ்
சங்கஞ்சிலம்பச்சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும்புனல்பொங்கப்
பங்கயப்பூம்புனல் பாய்ந்தாடேலோரெம்பாவாய்

காதார்குழையாடப் பைம்பூண்கலனாடக்
கோதைகுழலாடவண்டின் குழாமாடச்
சீதப்புனலாடிச் சிற்றம்பலம்பாடி
வேதப்பொருள்பாடியப் பொருளாமாபாடிச்
சோதிதிறம்பாடிச் சூழ்கொன்றைத்தார்பாடி
யாதிதிறம்பாடியந்த மாமாபாடிப்
போதித்துநம்மைவளர்த் தெடுத்தபெய்வளைதன்
பாதத்திறம்பாடியா டேலோரெம்பாவாய்.

ஓரொருகாலெம்பெருமானென் றென்றேநம் பெருமான்
சீரொருகால்வாயோவாள் சித்தங்களிகூர
நீரொருகாலோவா நெடுந்தாரைகண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள்
விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற்கிங்ஙனே பித்தொருவராமாறு
மாரொருவரில்வண்ணமாட் கொள்ளும்வித்தகர்தாள்
வாருருவப்பூண்முலையீர் வாரநாம்பாடி
யேருருவப்பூம்பனல்பாய்ந் தாடேலோரெம்பாவாய்

முன்னிக்கடலைச்சுருக் கியெழுந்துடையா
ளென்னத்திகள்ந்தெம் மையாளுடையாளிட்டிடையின்
மின்னிப்பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னச்சிலம்பிற் சிலம்பித்திருப்புருவ
மென்னச் சிலைகுலவிநந் தம்மையாளுடையாள்
தன்னிற்பிரிவிலா வெங்கோமானள்பர்க்கு
முன்னியவணமக்குமுன் சுரக்குமின்னருளே
யென்னப்பொழியாய்மழை லோரெம்பாவாய்



செங்கணவன்பாற்றிசை முகன்பாற்றேவர்கள்பா
லெங்குமிலாததோரின் பநம்பாலதாக்
கொங்குண்கருங்குழலிநந் தம்மைக்கோதாட்டி
யிங்குநம்மில்லங்கடோறு மெழுந்தருளிச்
செங்கமலப்பொற்பாதந் தந்தருளுஞ்சேவகனை
யெங்கணரசையடியே'ங் கட்காமுதை
நங்கள்பெருமானைப் பாடிநலந்திகழப்
பங்கயப்பூம்புனல்பாய்ந் தாடேலோராம்பாவாய்

அண்ணாமலையானடிக் கமலஞ்சென்றிறைஞ்சும்
விண்ணோர்முடியின் மணித்தொகைவீறற்றாற்போற்
கண்ணாரிரவிகதிர்வந்து கார்கரப்பத்
தண்ணாரொளிமழுங்கித் தாரகைகடாமகலப்
பெண்ணாகியாணாகியலியாய்ப் பிறங்கொளிர்சேர்
விண்ணாகிமண்ணாகித் தனையும் வேறாகிக்
கண்ணாரமுதமுமாய் நின்றான்கழல் பாடிப்
பெண்ணேயிப்பூம் புனல்பாய்ந்தோடேலோரெம்பாவாய்

உங்கையிற்பிள்ளையுனக் கேயடைக்கலமென்
றங்கப்பழஞ்சொற்புதுக் குமெம்மச்சத்தா
லெங்கள் பெருமானுனக் கொன்றுரைப்போங்கே
ளெங்கொங்கைநின்னன் பரல்லார்தோள்சேரற்க
வெங்கையுனக்கல்லா தெப்பணியுஞ்செய்யற்க
கங்குல்பகலெங்கண் மற்றோன்றுங்காணற்க
விங்கிப்பரிசேயெமக்கெங் கோனல்குதியே
லெங்கெழிலென் ஞயிறெமக்கேலோரெம்பாவாய்

போற்றியருளுகநின் னாதியாம்பாதமலர்
போற்றியருளுகநின்னந் தமாஞ்செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குந் தோற்றமாம்பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும் போகமாம்பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்கு மீறாமிணையடிகள்
போற்றி மாலான்முகனுங் காணாதபுண்டரிகம்
போற்றியாமுய்யவாட் கொண்டருளும்பொன்மலர்கள்
போற்றியாமார்கழிநீராடேலோரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்



# நன்றி நவிலல்

எமது குடும்பத்தலைவர் திரு முருகேசு சுப்பையா அவர்கள் இறைபதம் சேர்ந்த வேளையில் விரைந்து வந்து எமது துயரத்தில் பங்கு கொண்டு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், மற்றும் அனுதாபச் செய்திகளை அனுப்பிய அன்பர்கள் அனைவருக்கும்; எமது அழைப்பை ஏற்று வீட்டுக்கிருத்தியத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## நன்றி

இங்கனம்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள

# வம்சாவழி

முருகேசு + சின்னாச்சி

- அன்னப்பிள்ளை + வைரமுத்து
  - சிவபாலன்
  - செல்வராணி
  - கிருஷ்ணபாலன்
- சுப்பையா + தங்கம்மா
  - பாஸ்கரன் (கனடா) + வளர்மதி
    - சிந்துஜா
  - பிரபாகரன் (ஜேர்மனி)
  - கலைவாணி + கிருஷ்ணபாலன்
    - இராகுலன்
    - கிருத்திகா
  - வசீகரன் (பிரான்ஸ்) + சிவரஞ்சனி
  - கிருபாகரன்
- நாகம்மா + சின்னத்தம்பி
  - சிவலோகநாயகி
  - சிவலோகநாதன்
  - லோகேஸ்வரன் (ஜேர்மனி)
  - விக்னேஸ்வரன் (ஜேர்மனி)
  - சாந்தநாயகி (ஜேர்மனி)
  - சர்வலோகநாயகி
- தங்கம்மா + சுப்பிரமணியம்
  - மகேந்திரராஜா (லிபியா)
  - மனோகரன் (பிரான்ஸ்)
  - ஜெயகௌரி